2006 ஆகஸ்ட் 1]

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்ட முன்வடிவை நாங்கள் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது. அறிமுக நிலையிலேயே உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது. உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அதை record பண்ணிவிடலாம்.

4. விதி 110-ன்கீழ் அறிக்கை

தேர்தல் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றி வருதல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2006 ஆகஸ்ட் 1

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குப் பேச நேரம் கிடைக்காத காரணத்தால் நான் நேற்றுச் சொல்வதாக இருந்த சில கருத்துகளை, சில செய்திகளை, வேறு வழியின்றி இன்று 110 விதியின் கீழ் இந்த மாமன்றத்தில் வைக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த 2006 ஆம் ஆண்டு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆதரவோடு திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் இந்த மூன்று மாத காலத்திற்குள்ளாகவே பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கிலோ அரிசி 2 ரூபாய், பள்ளிக் குழந்தைகள் சத்துணவில் வாரம் இரண்டு முட்டைகள், 7,000 கோடி ரூபாய் விவசாயிகள் கூட்டுறவுக் கடன் இரத்து, பள்ளிகளில் தமிழ் கட்டாயம், திருமண நிதி உதவித் திட்டம், மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணம் குறைப்பு, வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை, நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம், கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு வட்டிக் குறைப்பு, சுயநிதி சிறப்புத் தொகை கட்டி முன்னுரிமை பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம், அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்குத் தனித்தனி வாரியங்கள், ஒப்பந்த முறை ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்குக் காலமுறை ஊதியம், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக ஆணை, காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிப்பு, திரைப்படத் துறைக்கு தாராளச் சலுகைகள், சமூக நீதி இடஒதுக்கீடு தீர்மானம், கண்ணகி சிலை மீண்டும் அமைப்பு, சிவாஜி சிலை திறப்பு, விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவித் திட்டம், முதியோர்—நலிந்த கலைஞர்கள், ஊனமுற்றோருக்கு உதவித் தொகை உயர்வு, எஸ்மா—டெஸ்மா சட்டங்கள் நீக்கம், மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கம், வணிகர்களுக்கு வரிச் சலுகைகள், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வரி நீக்கம், அரசு அலுவலர்களுக்கு அளப்பரிய சாதனைகள்.

(முற்பகல் 9-50)

தேர்தல் வாக்குறுதிகள் ஒரே கட்டமாக நிறைவேற்றப்படுவதும், பல கட்டங்களில் நிறைவேற்றப்படுவதும்தான், நடைமுறை சாத்தியமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனுபவ ரீதியாக அறிவார்கள். அவற்றில் ஒன்றான, வண்ணத் தொலைக்காட்சி இல்லாத வீடுகளுக்கு, அத்தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிட ஒரு அனைத்துக் கட்சிக்

2006 ஆகஸ்ட் 1] [கலைஞர் மு. கருணாநிதி]

குழுவையே அமைத்து, ஆலோசனைகளைப் பெற்று, முதற்கட்டமாக வரும் செப்டம்பர் மாதம் 30 ஆயிரம் வீடுகளுக்கு அத்தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தருவது என்றும், அடுத்த கட்டமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தொடர்ந்து வழங்குவது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு வாக்குறுதியான, தரிசு நில விநியோகம் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடான தீக்கதிர், இன்று 1–8–2006–ல் எழுதியுள்ள தலையங்கத்தில், தேர்தல் வாக்குறுதியாகத் தொடங்கி, பட்ஜெட் அறிவிப்பாக 2 ஏக்கர் தரிசு நிலத் திட்டம் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது, நல்ல அம்சம் என்றும், இந்த அறிவிப்பை அமலாக்குவது அவ்வளவு சுலபம் அல்ல என்பது உண்மையென்றாலும், இத்திட்டம் நிறைவேற ஆக்கபூர்வமான யோசனைகள் கூறுவதே மாநில மக்கள் நலனில் அக்கறை உள்ளோரின் தலையாய பணியாகும் என்றும், அ.தி.மு.க அரசு முன்பு சமர்ப்பித்த பட்ஜெட் உரையில் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இந்தியா முழுவதும் உள்ள விவசாய நிலப் பரப்பில், 3.5 சதவிகிதமே மேற்கு வங்கத்தில் உள்ளது, ஆனால், இந்தியா முழுவதும் விநியோகிக்கப்பட்ட நிலத்தில் 20 சதவிகிதம் மேற்கு வங்கத்தில் விநியோகிக்கப்பட்டவை என்பது சாதாரண செய்தி அல்ல என்றும், அதிலும், 10.63 இலட்சம் எக்டர் நிலங்களை, 26 இலட்சத்து 40 ஆயிரம் குடும்பங்களுக்கு விநியோகித்து இருக்கிறார்கள் என்றும், தரிசு நில விநியோகத் திட்டம், உரிய முறைப்படி செயல்படுத்தப்பட்டால், அதன் பலன் அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கவே செய்யும் என்றும், கருத்து அமைந்த பகுதியைச் சுட்டிக்காட்டுவதோடு, தரிசு நிலம் பற்றிய தேர்தல் அறிக்கை வாக்குறுதியை, இந்த அரசு நிறைவேற்றுவதற்குத் தொடக்கம் செய்து விட்டது என்பதற்கான புள்ளி விவரத்தையும் இந்த அவைக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அதன் விவரம் வருமாறு. தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஏழையெளிய விவசாயக் குடும்பங்களுக்கு 2 ஏக்கர் வீதம் அளிப்பது என்று தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தற்போது தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்கள் எவ்வளவு என்பது குறித்து, கணக்கு எடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக தமிழக அரசின் வருவாய்த் துறை மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள்

ஒத்துழைப்போடு நடைபெற்று, முதல்கட்ட புள்ளிவிவரங்கள் தற்போது அரசுக்கு வந்துள்ளன. ஆக்கிரமிப்பு இல்லாத, ஒப்படை செய்யக்கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் 1 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர். சிறு குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு தரிசு நிலம் 67 ஆயிரம் ஏக்கர். 98 ஆயிரம் ஏழை விவசாயிகள் இந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். சிறு குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் 7 இலட்சம் ஏக்கர், இது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானதாக இருக்கிறது.

(1) ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான 1 இலட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

முற்பகல் 9—55

(2) சிறுகுறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலமான 67 ஆயிரம் ஏக்கரைப் பண்படுத்தி அதை ஆக்கிரமித்துள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கே மீண்டும் வழங்கப்பட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(3) சிறுகுறு விவசாயிகளுக்குச் சொந்தமான 7 இலட்சம் ஏக்கர் தரிசு பட்டா நிலத்தைப் பொறுத்தவரையில், அவர்களாக விரும்பிக் கேட்டுக்கொண்டால், அந்த நிலத்தை விவசாயம் செய்யத்தக்க நிலமாகப் பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும். எனவே, இந்த வகையில் முதல் கட்டமாகத் தமிழகத்திலே உள்ள சுமார் 5 இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்குத் தரிசு நிலத்தை மேம்படுத்தி இந்த அரசால் வழங்கப்படும். அதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்குத் தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.